SINCE 1997

ஆகஸ்ட் 2023

விலை ரூ.30/-

# லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் மாத இதழ்

புறப்படு பெண்ணே! புவியசைக்க...

சாதிக்கத் துடிக்கும் சகோதரிகளுக்கான ஒரே பெண்கள் மாத இதழ்

ஆசிரியர்

கிரிஜா ராகவன்



அமெரிக்காவில் காஞ்சிபுரம்

## எதிர்ப்புகள் நம்மை வலிமையாக்கும்

## வண்ணங்களில் பால் கவர்

## டமாட்டர் வெஜ் பிரியாணி

## அன்னம் வழிபட்ட பெருந்திருக்கோயில்

## ஓணம் பண்டிகை வரலாறு

லேடீஸ் ஸ்பெஷல்

அறுசுவை சமையல் 30

இதழுடன் இணைப்பு

(16 பக்கங்கள்)

## மலேசிய உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட

# சாப்ட்வேர் கம்பெனி முதலாளி

### காம்கேர் நிறுவனர் கே. புவனேஸ்வரி



ஜூலை 21 முதல் 23 வரை மலேசியாவில் நடைபெற்ற 11–வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தொழில்நுட்பம் குறித்து பேசுவதற்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார் காம்கேர் நிறுவனத்தின் நிறுவனர் கே. புவனேஸ்வரி. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்தியக் கிளையின் தலைவரும் செயலாளரும் ஆன திரு. நந்தன் மாசிலாமணி அவர்கள் மிக சிறப்பாக இந்த மாநாட்டை ஒருங்கிணைத்திருந்தார். மாநாட்டை மலேசியா நாட்டுப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்கள் அதிகாரப் பூர்வமாக திறந்து வைத்தார். மலேசியா, இந்தியா, தென் கொரியா, சீனா, அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து, துபாய், இலங்கை உட்பட 50 நாடுகளில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான வல்லுநர்கள் இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

தொழில்நுட்பம், கலை, இலக்கியம், திரைத் துறை என பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் உரை நிகழ்த்தினார்கள். இந்த வரிசையில் இவர் 'மிரட்டும் MetaVerse, அசத்தும் AI. இனி நடக்கப் போவது என்ன?' என்ற தலைப்பில் தொழில்நுட்பம் குறித்து உரையாற்றினார்.

**இவரது உரையின் சாராம்சம்:** "நம் நாட்டில் கம்ப்யூட்டர் சயின்ஸ் அறிமுகம் ஆவதற்கு முன்பே இந்தத் துறையில் இரட்டைப் பட்டம் பெற்று அதாவது M.Sc. கம்ப்யூட்டர் சயின்ஸ் முடித்துவிட்டு, காம்கேர் சாஃப்ட்வேர் என்ற நிறுவனத்தை 1992 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கினேன். அந்த வகையில் தமிழகம் மட்டும் இல்லாமல் இந்தியா முழுவதும் தொழில்நுட்பத்தைக் கொண்டு சேர்த்ததில் எங்கள் நிறுவனத்துக்கு நிறைய பங்கு உள்ளது. எங்கள் நிறுவனத்தில் 2 பிரிவுகள் உள்ளன. ஒன்று லாஜிக்கல், இரண்டாவது கிரியேட்டிவ். லாஜிக்கல் பிரிவில் சாஃப்ட்வேர் தயாரிப்பு, வெப் டெவலெப்மெண்ட், ஆப் தயாரித்தல் என்று இயங்குகிறோம். கிரியேட்டிவ் பிரிவில் அனிமேஷன் தயாரித்தல், ஆவணப்படங்கள் இயக்குதல் தயாரிக்கிறோம். நிறைய தொழில்நுட்ப நூல்களை குறிப்பாக தமிழில் வெளியிட்டு வருகிறோம். இதுவரை 200–க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி உள்ளேன். அவற்றில் பல தமிழகம், இந்தியா மட்டுமில்லாமல் பல்வேறு உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாக இருப்பதுடன் நூலகங்களிலும் இடம்பெற்றுள்ளன. ஆடியோ, வீடியோவாகவும் பதிவு செய்துகொண்டே வருகிறேன். மக்களுடன் நானும் எங்கள் காம்கேர் சாஃப்ட்வேர் நிறுவனமும் நெருக்கமாவதற்கு தாய் மொழி தமிழ்தான் காரணம்.

இனிவரும் காலகட்டத்தில் இந்த உலகை ஆள இருப்பது செயற்கை தொழில்நுட்பமே. எந்த ஒரு படைப்பும் மூன்று தலைமுறை மக்களால் கொண்டாடப்பட்டால் அதன் தரத்தைப் பற்றி நாம் பேச வேண்டிய அவசியமே இல்லை. அந்த வகையில் தொழில்நுட்பத்தின் மூன்றாவது தலைமுறை நடந்து கொண்டுள்ளது. Web 1.0, Web 2.0, Web 3.0 என தொழில்நுட்பத்தின் மூன்று தலைமுறையோடும் நான் பயணித்திருப்பதால் அந்தத் துறையின் நீள அகலத்தை மிக இயல்பாகவும், எங்கள் காம்கேரில் நாங்கள் தயாரிக்கும் சாஃப்ட்வேர் தயாரிப்புகளின் உபயோகப்படுத்துகிறோம்.. தொழில்நுட்பத் துறையில் நான் பெறுகின்ற அனுபவங்களை உலகம் முழுவதும் உள்ள மக்கள் கூடி இருக்கும் இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் உலகத் தமிழர்கள் அனைவருடனும் பகிர்ந்துகொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

மாநாட்டு நிறைவு விழாவில் மலேசியா துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, மலாயாப் பல்கலைக்கழகம் துணைவேந்தர், மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இராஜேந்திரன் போன்றோர் வீற்றிருக்கும் மேடையில் சிறப்பு விருந்தினர்களுள் ஒருவராக காம்கேர் நிறுவனத்தின் நிறுவனர் கே. புவனேஸ்வரி கௌரவிக்கப்பட்டார்.

www.compcarebhuvaneswari.com